# நடப்பு நிகழ்வுகள்- ஜூலை 18 - 2017

❖ சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் ஜீலை – 18.
தென் ஆப்பிரிக்காவின் முன்னால் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா சமாதானத்திற்கும் சுதந்திரத்திற்கும் செய்த பங்களிப்பிற்காக அவரது பிறந்த நாளான ஜுலை – 18 சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக ஐ.நா.சபையால் 2009 நவம்பர் முதல் கடைபிடிக்கப்படுகிறது.

❖ நெதர்லாந்தின் ஆம்ஸ்ராமில் நடைபெற்ற 15 வயதுக்கு உட்பட்ட மகளிருக்கான 2017 டச்சு ஓபன் ஜுனியர் ஸ்குவாஷ் போட்டியில் அமெரிக்காவின் செரீனா டேனியலை தோற்கடித்து இந்தியாவின் அனன்யா சாம்பியன்ஷிப் பட்டம் வென்றார்.

❖ வீடு வாங்குபவர்களுக்காக பிரத்யேகமாக SBI ரியாலிட்டி (SBI Realty) எனும் இணையதளத்தை SBI தொடங்கியுள்ளது. இது நாடுமுழுவதும் அதாவது 13 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பிரதேசத்திலுள்ள 30 நகரங்களை உள்ளடக்கியது. SBI–யால் அங்கீகரிக்கப்பட்ட 3000 திட்டங்களில் இருந்து தங்கள் கனவு வீடுகளை தேர்ந்தெடுக்க வாடிக்கையாளருக்கு உதவுகிறது.

❖ குடியரசுத் தலைவர் தேர்தலில் பாஜக வேட்பாளர் ராம் நாத் கோவிந்த் வெற்றி பெற்றுள்ளார். நாட்டின் 14-வது குடியரசுத்தலைவர் ஆகிறார். எதிர் கட்சி வேட்பாளர் மீராகுமாரை விட இரு மடங்கு வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

❖ US-ன் நியூயார்க் நகரில் நடைபெற்ற 18-வது சர்வதேச இந்திய திரைப்பட அகடாமியின் விருதுகள் வழங்கப்பட்டது. அதில் "பிங்க்" திரைப்படத்தில் தனது கதாபாத்திரத்திற்காக 2017–ம் ஆண்டின்

சிறந்த மகளிருக்கான விருது "டாப்சி பன்னுக்கு" வழங்கப்பட்டது.

சிறந்த நடிகருக்கான விருது – சாகித் கபூர் மற்றும் அலியா பட் (உத்தா பஞ்சாப்)

சிறந்த இயக்குநருக்கான விருது – அநிருத்தா ராய் சௌத்திரி (பிங்க்)

சிறந்த திரைப்படம் – நீரஜா

சிறந்த துணைநடிகருக்கான விருது (ஆண்கள்) அனுபம் கேர் (M.S.Dhoni : The untold story)

சிறந்த அறிமுக விருது (பெண்கள்) திஷா பதானி (M.S.Dhoni : The untold story)

- சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை தொடர்ந்து கோயமுத்தூர் மாநகரில் பெருகி வரும் போக்குவரத்தை நெரிசலை தீர்க்கும் வகையில் மெட்ரோ ரெயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் மூலமாக ஜெர்மன் நிதி நிறுவனமான கே.எப்.டபுள்யூவிடம் நிதியுதவி பெறப்படும்.

- மாற்றுத்திறனாளிகளுக்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இதில் ஆண்களுக்கான உருளை தடி (CLUB THROW) எறிதலில் அரியானாவைச் சேர்ந்த இந்திய வீரர் அமித்குமார் சரோஹா 30.25 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கம் வென்றார்.

- அமெரிக்காவில் வாஷிங்டன்னில் நடைபெற்ற உலகலாவிய "ரோபாட்டிக்ஸ்" போட்டி நடந்தது. இதில் இந்தியா உட்பட 157 நாடுகள் கலந்து கொண்டன. இதில் மும்பையைச் சேர்ந்த மாணவர்கள் தங்கப்பதக்கத்துடன் கூடிய ஜாங் ஹெஹ் என்ஜினீயரிங் டிசைன் விருதினை வென்று சாதனை படைத்தனர். உலகலாவிய சவால் மேட்ச் பிரிவில் வெண்கலமும் வென்றார்கள்.

- பத்திரிக்கையாளர் ஓய்வூதியத்தினை ரூ8,000-ல் இருந்து ரூ10,000 ஆகவும் பத்திரிக்கையாளர் குடும்ப ஓய்வூதியத்தினை ரூ4,750-ல் இருந்து ரூ5,000 ஆகவும் தமிழக அரசு உயர்த்தி அறிவித்துள்ளது.

- சென்னை மண்டல அஞ்சல் துறை தலைவராக ஆர்.ஆனந்த் பொறுப்பேற்றுக்கொண்டார். சென்னை மண்டல அஞ்சல் துறை தலைவராக இருந்த ராதிகா சக்கரவர்த்தி ஆந்திர மாநில அஞ்சல் துறை வட்டத்திற்கு மாற்றப்பட்டதை அடுத்து ஆர்.ஆனந்த் என்ற அதிகாரி நியமிக்கப்பட்டார்.

- Everest International Model United Nations, Regional Editional Edition 2017 என்னும் மாநாடு நேபாள தலைநகர் காத்மாண்டில் ஜுலை 10 முதல் 14 வரை நடைபெற்றது.

OXFORD IAS ACADEMY